

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி, வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், குட்டி புகழேந்தி, சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், பாலமுரளிகிருஷ்ணா உட்பட பலர் உள்ளனர்.




தி.மு.க. தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்க அலுவலக வளாகத்தில் தீர்மானக் குழு தலைவர் கவிஞர் தமிழ் தாசன் தலைமையில் தீர்மானக்குழு செயலாளர்கள் மீ.அ. வைத்தியலிங்கம் , கீரை எம்.எஸ்.விஸ்வநாதன், அக்ரி கே.பி.டி.கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் சிறப்புரை ஆற்றினார். மதுரையில் வரும் ஜூன் முதல் நாள் நடைபெறும் தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தலைமையால் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் தயாரிப்புப் பணிகள் பற்றியும், கழக ஆக்கப் பணிகள்; வரும் ஜூன் மூன்றாம் நாள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளை கொண்டாடுவது பற்றியும் பேசப்பட்டது. மறைந்த தீர்மானக் குழு உறுப்பினர் நெல்லை சிவகிரி ப.ஆ.சரவணன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானக் குழு துணைத் தலைவர் டாக்டர் மாசிலாமணி வரவேற்புரையாற்றினார். இணைச் செயலாளர் வ. சத்தியமூர்த்தி நன்றி கூறினார். கூட்டத்தில் பார் இளங்கோவன், சுப. த. திவாகரன், தேனி ஜெயக்குமார், ச. தங்கவேல், வேங்கடபதி, மிசாசி ராமநாதன், ஆர். சேது மாதவன், ஆதிசங்கர், டி.டி.ரெஜினால்ட், எம். வி. வெற்றிச்செல்வன் செஞ்சி சிவா மூ.ரா.செல்வராஜ், ஆ.நாச்சிமுத்து, எம். வி. கோபால் என். வி. காமராஜ், நீலகண்டன் பொள்ளாச்சி அதிபதி ஆகிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### காவல்துறையினர் – காங்கிரஸ் கட்சியினர் இடையே தள்ளுமுள்ளு!

# பீகாரில் மாணவர்களைச் சந்திக்கச் சென்ற ராகுல்காந்தி தடுத்து நிறுத்தம்!

## பீகார் காவல்துறையின் செயலுக்கு காங்கிரஸ் கடும் கண்டனம்!

பாட்னா, மே.16 -

பீகாரில் பட்டியலின மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க சென்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தியை அம்மாநில காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால் கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பீகார் மாநிலம் தர்பங்கா பகுதியில் உள்ள அம்பேத்கர் மாணவர் விடுதியில் பட்டியலின மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடன் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி நேற்று கலந்துரையாட இருந்தார். இதற்காக டெல்லியிலிருந்து விமானம் மூலம் பீகார் சென்ற ராகுல்காந்தி, பின்னர் அங்கிருந்து கார் மூலம் தர்பங்கா பகுதிக்குச் சென்றார். ஆனால் அங்கு அம்பேத்கர் மாணவர் விடுதிக்கு அவரைச் செல்ல விடாமல் பீகார் காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர்.

இதற்கு காங்கிரஸ் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் காவல்துறையினருக்கும் - காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டு பரபரப்பு உருவானது. இதனையடுத்து காரில் இருந்து இறங்கிய ராகுல்காந்தி, அம்பேத்கர் மாணவர் விடுதிக்கு நடந்தே சென்றார்.

இதனிடையே, ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில், பீகாரில் அம்பேத்கர் விடுதியில் பட்டியலின மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களை தாம் சந்தித்து கலந்துரையாடுவதை தேசிய ஜனநாயக கூட்டணியின் "இரட்டை இயந்திர ஏமாற்று அரசாங்கம்" தடுக்கிறது என்று குற்றம்சாட்டியுள்ளார்.

மாணவர்களை சந்திப்பது எப்போதிலிருந்து குற்றமாக மாறிவிட்டது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தாம் மாணவர்களை சந்திப்பதால் முதலமைச்சர் நிதிஷ்குமாருக்கு என்ன பயம் என்று ராகுல்காந்தி வினவியுள்ளார்.

பீகாரில் கல்வி மற்றும் சமூக நீதி மோசமான நிலையில் உள்ளதை மறைக்கவிரும்புகிறீர்களா? என்று நிதிஷ்குமாருக்கு ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

# திருவாரூரில் - பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆய்வு!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி கே.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், மே 16 -

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பால்வளத்துறை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் இணைந்து நடத்தும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர்கள் மற்றும் இணை துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக்கூட்டம் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாரிமுத்து, எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பால்வளத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் 57 பால் உற்பத்தி சங்கங்கள் உள்ளது. அதை அதிகபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் இதுவரை விவசாய பெருங்குடி மக்களுக்கு 1000 கோடிக்கு மேல் கடன் வழங்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 57 சங்கங்கள் மூலம் 8331 உறுப்பினர்களை கொண்டு நாளொன்றுக்கு சராசரியாக 44875 லிட்டர் பால் கொள்முதல் செய்து 20995 லிட்டர் உள்ளூர் விற்பனை செய்தது போக, தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு 23880 லிட்டர் பால் அனுப்பப்பட்டு வருகிறது. 18.12.2023 முதல் நாளது தேதி வரை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/ ஊக்கத் தொகைக்காக 8331 உறுப்பினர்களுக்கு ரூ.3 கோடியே 64 இலட்சத்து 84 ஆயிரத்து 774 தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் நவம்பர் 2024 முதல் சங்க உறுப்பினர்களின் வங்கி கணக்கில் 47 சங்கங்களுக்கு ரூ.1 கோடியே 59 இலட்சத்து 06 ஆயிரத்து 283 ஒன்றியத்தால் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

01.04.2024 முதல் நாளது தேதி வரை கறவைமாட்டு கடன் ரூ.248.48 இலட்சம் அளவில் 381 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 01.04.2024 முதல் நாளது தேதி வரை முஊஊ கறவைமாட்டு பராமரிப்புக் கடன் ரூ.351.4 இலட்சம் அளவில் 1681 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தாண்டு பால் உற்பத்தியை பெருக்க கால் நடை வளர்ப்பதற்கு மிகுதியான நபர்களுக்கு கறவை மாட்டு கடன் வழங்க முனைப்பு மேற்கொண்டுள்ளோம். இதை பயன்படுத்திக்கொண்டு விவசாய பெருங்குடி மக்கள் பால் உற்பத்தியை பெருக்க முன்வரவேண்டும்.

சங்கங்களில் தரத்தின் அடிப்படையில் பால் கொள்முதல் செய்ய ஏதுவாக 29 சங்கங்களுக்கு பால் பரிசோதனை கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 23 சங்கங்களுக்கு பால் பரிசோதனை கருவிகள் இன்று வழங்கப்பட்டுள்ளது. 2023 2024 ஆம் ஆண்டு இறுதித ணிக்கை அறிக்கையின்படி 6840 சங்க உறுப்பினர்களுக்கு கூடுதல் கொள்முதல் விலையாக ரூ.59,51,356.19/ வழங்கப்பட்டுள்ளது. வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின்கீழ் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டி ஒன்றியத்தில் 6 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.9.90 இலட்சம் செலவில் சங்கங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான கணினி, பால் பரிசோதனைக்கருவி, பதிவேடுகள் மற்றும் பால்கேன்கள் உள்ளிட்ட பால் கொள் முதல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது என பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்தார்.

தொடர்ந்து, திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பால்வளத்துறை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பாக ரூ.1.65 இலட்சம் மதிப்பிலான பால் உற்பத்தி பால் பரிசோதனைக்கருவி, பதிவேடுகள் மற்றும் பால்கேன்கள் உள்ளிட்ட பால் கொள்முதல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக, திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் காமராஜர் சாலையில் புதியதாக தொடங்க உள்ள ட்டி.வி.ஆர்.(டி) 470 கொரடாச்சேரி கலைஞர் ஆவின் விற்பனை நிலையம், கலைஞர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கும் விழாவினை பால்வளத் துறை அமைச்சர்த.மனோ தங்கராஜ் மற்றும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் க.தன்ராஜ், நகர் மன்ற தலைவர் மன்னைத. சோழராஜன், நகர செயலாளர் வீரா.கணேசன் , ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், புலிவலம் ஏ.தேவா, டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேறி சிவா, நா.கவியரசு, கே.வி. கே.ஆனந்த், நகரக் கழகச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் பேரூர்க் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# என்.எல்.சி. தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்!

(பதிவு எண்.3463/SAT, பேரவை இணைப்பு எண்.75)

## தொ.மு.ச.பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் என்.எல்.சி. தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண்.3463/SAT, பேரவை இணைப்பு எண்.75) நிர்வாகிகள் தேர்தல் தொ.மு.ச. பேரவைச் செயலாளர் என்.தனசேகரன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு கீழ்க்கண்ட தேர்தல் கால அட்டவணைப்படி நடைபெறும்.

**தேர்தல் கால அட்டவணை**

| | |
|---|---|
| வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | - 19.5.2025 காலை 10.00 மணி |
| இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பகுதி வாரியாக | - 21.5.2025 காலை 10.30 மணி வரை |
| வேட்பு மனு படிவம் வழங்குதல் | - 22.5.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை |
| வேட்பு மனு தாக்கல் | - 23.5.2025 காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை |
| வேட்பு மனு பரிசீலனை | - 24.5.2025 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 வரை |
| தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | - 25.5.2025 மதியம் 12 மணி |
| வேட்பு மனு திரும்பப் பெறுதல் | - 26.5.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை |
| இறுதி வேட்பாளர் பட்டியல் | - 27.5.2025 காலை 10.00 மணி |
| தேர்தல் வாக்குப் பதிவு | - 5.6.2025 காலை 5.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை |

குறிப்பு: 1. வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை தவிர இதர தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

2. வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குப் பெட்டிகள் வட்டம் -9ல் அமைந்துள்ள என்.எல்.சி. பள்ளிக்கு கொண்டு வரப்பட்டு இரவு 9.00 மணி முதல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

15.5.2025
இடம்: கலைஞரகம்

**மு.சண்முகம் எம்.பி.**
பொதுச் செயலாளர்
தொ,மு,ச, பேரவை

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

நெல்லை, மே 16 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நெல்லை வண்ணார்பேட்டை ஆப்பிள் ட்ரீ கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் - தூத்துக்குடி நாடாளு மன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

பின்னர் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் செய்தி யாளர்களிடம் தெரிவித்ததாவது:-

பொள்ளாச்சி விவகாரத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் பக்கம் அ.தி.மு.க. அரசு இருக்கவில்லை. பொள்ளாச்சி விவகாரத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் முறையாக வழக்குப் பதிவு கூட செய்யப்பட வில்லை. எடப்பாடி பழனிச்சாமி மீது நம்பகத்தன்மை இல்லாத நிலை ஏற்பட்டதால் பொள்ளாச்சி விவகாரத்தை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த விவகாரத்தில் நியாயம் கிடைக்கும் நிலை ஏற்படாத காரணத்தினாலேயே மக்கள் போராட்டம் நடத்தி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. பொள்ளாச்சி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றியது பெருமை என எடப்பாடி பழனிச்சாமி சொல்வது வெட்கப்பட வேண்டிய விஷயம்.

துணைப் பொதுச் செயலாளராக திருநெல்வேலி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்துள்ளேன். வரும் சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தின் அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் வெற்றி பெறும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தெரிவித்தார்.

### கழகத் தொண்டர் அணிச் செயலாளர்

# மாஸ்டர் பெ.சேகர் தாயார் திருமதி மாரிமுத்து மறைவு!

## அன்பகம் கலை – டி.கே.எஸ்.இளங்கோவன் – நே.சிற்றரசு அஞ்சலி!

சென்னை, மே 16 -

தி.மு.க. மாநிலத் தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகரின் தாயார் திருமதி மாரிமுத்து அவர்கள் (வயது 95) (தி.மு.க. மேல்வசலைக் கிளை முன்னாள் அவைத் தலைவர்) வயது மூப்பின் காரணமாக 12.05.2025 அன்று இயற்கையெய்தினார்.

செய்தியறிந்ததும் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழகத் துணை அமைப்புச் செயலாளர் ஆன்ஸ்டின், கழகச் செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, அண்ணா அறிவாலய நிருவாகி ஆர்.பத்மநாபன், கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன், கழக இலக்கிய அணித் துணைச் செயலாளர் ஈரோடு இறைவன், மாநிலத் தொண்டர் அணி துணைச் செயலாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, மாநிலத் தொண்டர் அணிப் பயிற்சியாளர் இ. குருதாஸ், தஞ்சைத் தெற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் கா.கதிரவன், சென்னை வடக்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் கலையரசன், சென்னை மேற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் செந்தில் குமார்,

சென்னை வட கிழக்கு மாவட்டத் தொண்டர் அணித் துணை அமைப்பாளர் தச.எழில், சென்னை வடக்கு மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் இரா.முருகன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சுற்றுச் சூழல் அணித் தலைவர் ஆர்.இராஜேஷ், கடம்பத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் இரமேஷ், 120 ஆவது வட்டச் செயலாளர் ஐ.சி.எப். சங்கர், ஆதிதிராவிடர் குழு திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் போட்டோ ராஜா,

தமிழ்நாடு திரைப்பட பாடலாசிரியர்கள் சங்க நிருவனத் தலைவர் தமிழமுதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 13.05.2025 பிற்பகல் 3 மணிக்கு புறப்பட்டு மயிலாப்பூர் இடுகாட்டில் இறுதிச்சடங்கு நடைபெற்றது.

### அச்சரப்பாக்கத்தில் கழக அரசனி சாதனை விளக்க துண்டறிக்கை வழங்கல்!

காஞ்சபுரம், மே 16 –

காஞ்சி தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க கையேடு காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் வழிகாட்டுதலின்படி ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. தம்பு அவர்கள் வீடு வீடாக சென்று பொது மக்களுக்கு திமுக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி பொது சாதன விளக்க கையேடு வழங்கினார்.

இதில் ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சரத்குமார், திமுக கிளை கழக நிர்வாகிகள் தங்கராஜ், ராதா, குமரேசன் ஆகியோர் உடன் சென்றனர்.

### முன்னாள் வட்டக் கழக பொருளாளர்

# டி.சீனிவாசன் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

## வட்டச் செயலாளர் எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார் அறிக்கை!



சென்னை, மே 16-

மயிலை மேற்கு பகுதி 122 வது வட்டச் செயலாளர் எஸ்.ஆர் ராஜாசுரேஷ்குமார் அவர்களின் தந்தையும் முன்னாள் வட்டக் கழக பொருளாளருமான

டி.சீனிவாசன் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வட்டச் செயலாளர் எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார் எனது தலைமையில் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை காலை 11.30 மணி அளவில் ஆழ்வார்பேட்டை தெருவில் உள்ள அன்னாரின் திருவுருவ படத்திற்கு சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, மயிலை மேற்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அறுசுவை உணவு வழங்க உள்ளனர்.

இந்த நினைவு அஞ்சலியில் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் பகுதி பிரதிநிதிகள் அணிகளைச் சார்ந்த அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் நண்பர்கள் அனைவரும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர். ராஜா சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–153, போரூர், சுப்ரீ நகர், கணேஷ் அவென்யூ 9வது தெரு, விக்னேஷ்வரா நகர் சீதகாதி தெரு உள்ளிட்ட பல்வேறு தெருக்களுக்கு ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு அடிக்கல் பூஜை செய்த போது. இந்நிகழ்வில் மண்டலம்–11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், பகுதி துணை செயலாளர் இரா.பால்பாண்டியன், மாமன்ற உறுப்பினர் சாந்தி ராமலிங்கம், எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் தி.சார்லஸ், அ.மோசஸ், மாவட்ட பிரதிநிதி கோ.ராமலிங்கம் மற்றும் அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.